REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை.

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 14உ திங்கள் (29—11—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 15உ செவ்வாய் (30—11—54) [இதழ் 144

சாகசம் புரிந்த 'சாமி'க்குத் தண்டனை!

சுவாமி சிவசெதானயானந்த் என்பவர் 31 வயது மட்டும் நிரம்பப் பெற்றவர்; அரச குமாரர்கள் பலருக்கு 'மத குரு'வாக இருந்ததாகச் சொல்லிக்கொள்பவர்; 'யோக மாயை' கற்றவர் எனக் கூறிக்கொள்பவரும்கூட!

அந்த 'யோகாப்பியாசி', கடந்த 1951-ம் வருடம் செப்டம்பர்-அக்டோபர் மாதங்களுக்கிடையில் மாதரி என்ற சிறு மைனர் பெண்ணை கடத்திச் சென்றதுடன் டில்லியில் கடந்த ஜூலை மாதத்தில் அவளை 'தாக்கி'யதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி, இரண்டு குற்றங்களுக்கும் தனித் தனியாக 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்து, இரண்டையும் ஏக காலத்தில் அனுபவிக்க உத்தரவிட்டார்.

நாடகக் கலைக்குப் புதிய விலங்கு

திரு-கொச்சியில் காங்கிரஸ் சர்க்கார்?

தமிழர் மீது பட்டம் தொடுத்த வழக்குகள் வாபஸ் பெறப்படுமாம்

சென்ற ஆகஸ்ட் திங்கள் 11-ந் தேதியன்று, திரு-கொச்சி மாநிலத்தில் நடைபெற்ற திரு-தமிழக இணைப்புப் போராட்டத்தின் காரணமாக, திரு-கொச்சி சர்க்கார் தொடர்ந்துள்ள எல்லா வழக்குகளும், திரு.-த. நா. காங்கிரசுடன் எவ்வித சமரசப் பேச்சுகளும் நடத்தாமலேயே பட்டம் சர்க்கார் திரும்பப் பெற்றுக்கொள்ளுமென்று நம்பகமாகக் கூறப்படுகிறது.

அதிவிரைவிலேயே தி. கொ. ஆட்சிபீடத்திலமர்ந்திருக்கும் பி. சோ. கட்சி சர்க்கார், தனது பதவியிலிருந்து விலகுமெனவும், அதற்கடுத்து, காங்கிரஸ் கட்சி மந்திரி சபை அமைக்குமெனவும் கூறப்படுகிறது.

புதிதாக உருப்பெற இருக்கும் காங்கிரஸ் கட்சி அமைச்சரவையில் திரு-த. நா. காங்கிரசின் பிரதிநிதிகள் இடம் பெறமாட்டார்களென்றும், தற்போது, பி.-சோ. கட்சியிலுள்ள சிலர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொள்வர் என்றும், அப்படி காங்கிரஸ் கட்சியில் சேரும் அந்த பி.-சோ. கட்சி உறுப்பினர்கள் மந்திரி சபையில் இடம்பெறலாமெனவும் கூறப்படுகிறது.

அந்தக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஆபத்து ஏதேனும் ஏற்படும் வகையில் திரு-த. நா. காங்கிரஸ் நடந்து கொள்ளாதாம்!

இது விஷயம் குறித்து, திரு—கொச்சி சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் பனம்பள்ளி கோவிந்த மேனனும், சென்னை முதலமைச்சர் காமராசரும் விரைவில் சந்தித்துப் பேசுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(தினமலர்)

கல்கத்தா துறைமுகத்தில் வேலை நிறுத்தம்

7000 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்

கல்கத்தா, நவ. 28—

கல்கத்தா துறைமுகத்தில் தொழிலாளர்கள் செய்துள்ள வேலை நிறுத்தத்தினால் 80 கப்பல்களில் வேலை எதும் நடைபெறாது போயிற்று என்று தெரிகிறது.

கிடங்குகளிலிருந்து சாமான்களை கப்பல் வரை தூக்கிச் செல்லும் தொழிலாளர்கள் 3000 பேர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள் என்றும், இன்று மொத்தம் 7,000 பேர் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

கூலி உயர்வு கோரி இவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள்.

பெரியார் பர்மா சேர்ந்தார்

துறைமுகத்தில் தி. மு. க. சார்பில் வரவேற்பு

இரங்கூன், நவ. 28—

பெரியார் இராமசாமி அவர்கள் இங்கு வந்துசேர்ந்தார். பர்மா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், துறைமுகத்தில் அவருக்கு மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டார். அவ்வரவேற்பில் ஆயிரக்கணக்கான மக்கள் உற்சாகத்துடன் பங்கு கொண்டனர்.

பர்மாவில் அடுத்த திங்கள் 3-ம் நாள் நடைபெற இருக்கும் புத்த மாநாட்டில் கலந்துகொள்ள, அழைக்கப்பட்டு பெரியார் சென்றிருக்கிறார்.

கொதிக்கும் எண்ணெயிலிருந்து எரி நெருப்பில் தள்ளுவதா?

1876-ம் ஆண்டு நாடகச் சட்டம் கொடுமையானதாம்!

மேலும் உரிமை வழங்கப் புதிய சட்டமாம்!

முற்போக்கு நாடகங்களை சட்டத்தின் மூலம், முன்கூட்டியே தடுத்துவிட சென்னை காங்கிரஸ் சர்க்கார் முன்வந்திருக்கிறது. அதற்காக 1876-ம் ஆண்டில் இயற்றப்பட்டு நடைமுறையில் உள்ள நாடகச் சட்டத்தை, தம் விருப்பத்திற்கேற்பத் திருத்தம் செய்ய புதிய மசோதா ஒன்றை சென்னை சர்க்கார், சர்க்கார் செய்தி ஏட்டில் பிரசுரித்து இருக்கிறது.

பழைய சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், அச்சட்டத்தின் பிரிவுகளை எதிர்த்து வழக்காடுவதற்கு, அதற்கான உரிமை அந்தச் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லையாம். அந்த உரிமையை, அச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுதான் புதிய திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறதாக சர்க்கார் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதிய சட்டம் 15-விதிகளைக் கொண்டிருக்கிறது,

தடுக்கப்பட்ட நாடகங்களை நடிக்கிறவர்கள், அதற்குத் துணை நிற்கிறவர்கள், அதற்கான இடம் தருகிறவர்கள், ஆகிய அனைவர்களையும், புதிய சட்டத்தின் படி ஆறு திங்கள் வரை சிறை தண்டனை அளிக்கவும், அபராதம் விதிக்கவும், தண்டனை - அபராதம் ஆக இரண்டும் விதிக்கவும், சென்னை சர்க்கார் உரிமை வழங்கி இருக்கிறது —நாடகத் துறையினருக்கு அல்ல—நீதி மன்றங்களுக்கு!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

'புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதில் தென்னாடு புறக்கணிக்கப்படுவது ஏன்?

'செயற்கை உரம் உற்பத்திச்சாலை ஒன்று தெற்கில் துவக்கப்படுமா?'

உற்பத்தி அமைச்சரின் உறுதியற்ற பதில்

★

தென்னிந்தியாவில் புதிய தொழிற்சாலைகளை நிறுவி வளப்பமேற்படுத்துவதில், பொதுவாக இந்தியப் பேரரசுக்கு இருந்துவரும் அக்கரை இன்மையைக் குறித்து, மீண்டும் கேள்வி நேரத்தில் மக்கள் சபையில் விவாதம் கிளம்பியது.

இதைக் கருத்தில் கொண்டு, செயற்கை உரம் தயாரிப்புச் சாலை ஒன்றை தென்னாட்டில் துவங்க வேண்டும் என, தென்னிந்திய உறுப்பினர்களில் பலர் வலியுறுத்தினர். இக்கோரிக்கைக்கு, தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளாத வகையில் உற்பத்தி மந்திரி பதில் கூறினார்.

தென்னிந்தியஉறுப்பினர்களின் கேள்வியைத் தொடர்ந்து, பீகார் சுயேச்சை உறுப்பினரான ஜெயபால் சிங் என்பார் "குறிப்பிட்ட ஒரு தொழிலுக்குத் தேவைப்படும் மூலப் பொருள் கிடைக்கக்கூடிய இடத்திற்கு வெகு தொலைவில், அதற்கான தொழிற்சாலையை நிறுவ அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியின் பொருள் என்ன?" என வினவினர்.

அரசாங்கச் சார்பில் அதற்குப் பதில் கூறப்படவில்லை.

"புதிய செயற்கை உரம் உற்பத்திச்சாலைகளை நிறுவ மத்திய சர்க்கார் விரும்புகிறதா? அவைகளில் ஒன்றை தெற்கில் நிறுவும் எண்ணம் சர்க்காருக்கு இருக்கிறதா?"

என்று, மக்கள் சபை உறுப்பினர் தோழர் வீராசாமி அவர்கள் கேட்டார்.

முதல் வினாவிற்கு 'ஆம்' என்றும், எங்கெங்கு உரத் தொழிற்சாலையை நிறுவுவதென்பது, அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் கருத்து கிடைத்த பின்புதான் முடிவு செய்யப்படும் என்றும், மேற்குறித்தத் தொழிற்சாலை ஒன்றை தெற்கில் நிறுவுவது பற்றியும் சர்க்கார் யோசிக்கும் என்றும் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி அவர்கள் பதில் கூறினார்.

பட்டம் விருப்பம் நிறைவேறியது!

உரிமை கேட்ட தமிழர்களைச் சுட்டுக் கொன்றது நியாயமாம்

விசாரணை நாடகத்தின் தெரிந்த முடிவு

திருவனந்தபுரம், நவ. 28—

திரு—தமிழ்ப் பகுதிகளின் விடுதலைக்காகக் கடந்த ஆக. 11-ல் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களையொட்டி தென் திருவாங்கூரில் திரு—கொச்சி போலீசார் செய்த துப்பாக்கிப் பிரயோகம் 'நியாயமானது; சட்டவரம்பிற்குட்பட்டதே' என்று, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை செய்ய கடந்த செப்டம்பர் 24-ல் நியமிக்கப்பட்ட குழு தீர்ப்பு கூறியதாகத் தெரிகிறது.

திரு-கொச்சி மாநில உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கே. சங்கரன், இதுபற்றி விசாரணை நடத்துமாறு சர்க்காரால் நியமிக்கப்பட்டிருந்தார்.

சுமார் 111 அதிகாரிகள், அதிகாரிகளல்லாதோர் ஆகியோரின் சாட்சியங்களை விசாரணை செய்துவிட்டு சுமார் 25,000 வார்த்தைகள் கொண்ட அறிக்கையைத் தயார் செய்து, அரசாங்கத்திற்குஅனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

அந்த அறிக்கை முழுவதையும் அரசாங்கம் பரிசீலனை செய்தபின் வெளியிடுமாம்.

அந்த அறிக்கையின் இறுதியில், 'கடந்த ஆகஸ்டு 11-ல் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் நியாயமானதே, சட்டவரம்பிற்குட்பட்டதேயாகும்' என்று கூறப்பட்டுள்ளதாம்.

புத்தர் பிறந்த இடம்

பர்மிய சர்க்கார் கோவில் கட்டும்

நேபாள வானொலி தெரிவித்த செய்தி ஒன்றின்படி, புத்தர் பிறந்த இடமான 'லும்பினி'யில், பர்மிய சர்க்கார், ஆலயம் ஒன்றைக் கட்டத் தீர்மானித்திருக்கிறார்கள்.

புத்தர் பிறந்த இடம், இப்போது அநேகமாகசேதமுற்றுஇருக்கிறது

1956-ம் ஆண்டில் நடைபெறும் புத்த மாநாடு ஒன்று அங்கே நடைபெற வகை செய்யும் பொருட்டு 'லும்பினி' திருத்தி அமைக்கப்படும் என்று தெரிகிறது.

ஆலயங்களின் டிரஸ்டிகள்

தாழ்த்தப்பட்டவரை நியமிக்க சர்க்கார் கட்டளை

ஆலயங்களுக்கான டிரஸ்டிகள் நியமிக்கப்படும்போது, தாழ்த்தப்பட்ட இனத்தனவர்களையும் நியமிக்க வேண்டுமென்று ஆலய உதவி கமிஷனர்களுக்கு சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயங்களில் அனுமதிப்பது என்ற கொள்கை நடைமுறையில் அமுலாக்கப்படுவதைச் சுலபமாக்க, ஆலய டிரஸ்டிகளில் தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதன் மூலமும், ஆலய ஊழியர்களில் தாழ்த்தப்பட்ட மக்களை நியமிப்பதையும் வரவேற்கின்றனர்.

உதவி கமிஷனர்கள், எக்சிகியூடிவ் அதிகாரிகள், கிளர்க்குகள் ஆகியவர்களை நியமிப்பதிலும், கோவிலில் சாதாரண ஊழியம் செய்வோரை நியமிப்பதிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்பு இலாக்காவினர் உத்தரவிட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

ஒவ்வொரு ஆலயத்திலும் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தவரை கண்டிப்பாக சாதாரண வேலைகளில் நியமிக்கவேண்டுமென்று சர்க்கார் கருதுவதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 29—11—1954 திங்கள்

முதுகெலும்பு முறிகிறது!

எந்த நாட்டு அரசியல் சட்டமும், இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் சட்டம் போன்று விரிவானதாகவும், கூடிய விதிகளைக் கொண்டதாகவும் இல்லை என்பது விளக்கம். சட்ட புத்தகத்தின் துவக்கத்திலேயே குடிமக்களின் அடிப்படை உரிமைகள் என்ற பட்டியலும் அதற்கு அடுத்தாற்போல் இந்திய அரசின் குறிக்கோள்களெனப் பல விதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன; ஆனால் அவ்வுரிமைகள் அனைத்திலும் தலை சிறந்ததாக உள்ள பேச்சுரிமையையும், எழுத்துரிமையையும் கட்டுப் படுத்தி விடும் வகையில், சட்டத்தில் இருந்த அதற்கான விதியை ஆளவந்தார்களின் விருப்பத்திற்கொப்பப் பின்னர் திருத்தம் செய்து கொண்டதையும் நாடு அறிந்தே இருக்கிறது. மாற்றுக் கட்சியினரின் நியாயமான எதிர்ப்பை ஒடுக்க, அவ்வடிப்படை உரிமை விதிகளை மேலும் தங்கள் நோக்கம்போல் திருத்தி அமைக்கக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் முன்வந்தபோதிலும், பிறர் ஆச்சரியம் கொள்ளுவதற்கு ஒன்றுமில்லை. எந்த நாட்டிலும் அதிகாரத்தில் அமர்ந்திருப்போரின் இயல்பே, எதிர்ப்பாளர்களின் குரல்வளையை நெறிப்பதின் மூலம், மக்களிடையே அச்சமூளச் செய்து, அவர்கள் எதிர்ப்பை ஒழிக்க முயலுவதுதான் என்ற உண்மையை வலியுறுத்துகின்றன வரலாற்று ஏடுகள். எனவே, காங்கிரஸ் ஆளவந்தார்களும் மக்கள் உரிமையை மட்டந்தட்ட முயற்சிப்பதில் வியப்பு என்ன இருக்கிறது?

அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமை விதிகளைப் புகுத்திய வேளையில் காங்கிரஸ் மேலிடத்தவர்களுக்கு இருந்த மனப்பாங்கு, அதிகாரம் தரும் போதை தலைக்கேற ஏற, கணிசமாக மாறிவிட்டது. எவ்வகையிலும் மக்கள் உரிமையுடன் வாழ்வதுதான் சிறப்புடையது என்று, அக்கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்த காங்கிரஸ் மேலிடத்தார், காலப்போக்கில் தங்கள் கையில் உள்ள அதிகாரத்தைக் கெட்டிப்படுத்திக் கொள்வதுதான் மற்ற எல்லாவற்றிலும் இன்றியமையாதது என்ற முடிவிற்கு வந்துவிட்டனர். அதற்கொப்ப, தம் கை அதிகாரத்திற்கு முதலிடம் கொடுக்கவும், மக்கள் உரிமைகளை அதன் கீழ் போட்டு மிதிக்கவுமான முடிவிற்கு வந்துவிட்டார்கள்.

இன்னின்ன உரிமைகள் மக்களுக்கு இருந்தால்தான், அவர்கள் ஒவ்வொருவரும் முழு மனிதர்களாக வாழ முடியும் எனத் துவக்கத்தில் காங்கிரஸ்மேலிடத்தார் கொண்டிருந்த நியாயமான கோட்பாட்டிற்கு, அதிகார மோகத்திற்குத் தங்களைப் பணயம் வைத்துவிட்டதும், அக்கோட்பாட்டைச் சிதைத்துச் சீரழித்து, முன்னிலும் உருக்குலைக்கப்பட்ட ஒன்றினை, அதே அடிப்படை உரிமை என்று வெட்கப்படாமல் அவர்கள் விளம்புகின்றனர். சாதாரண குடிமக்களாகிய நாம், அவர்கள் அன்று காட்டிய உரிமை இலட்சணத்துடன், இன்று காட்டும் உரிமை இலட்சணத்தை ஒப்பவைத்துப் பார்த்து உள்ளம் வெதும்புகிறோம். இந்த முரண்படும் செயலினர்களைக் கண்டு நாம் பெருமூச்செறிகிறோம். அதன் பொருள் அறிந்தும் அறியாதவர்கள் போன்று, அவர்களோ 'எதிர்ப்பு ஒடுங்கியது; எங்கள் கை அதிகாரம் நிலைத்தது' என அச்சமின்றி அகமகிழ்கின்றனர்.

அவர்களின் இம்முரண்படும் செயலை முன்வைத்து நோக்கும் பொழுது, அவர்கள் துவக்கத்தில் குடிமக்களுக்கென உரிமை வழங்க முற்பட்டதே, அவ்வுரிமையைக் குடிமக்கள் அனுபவித்து இன்புற வேண்டும் என்ற நல்லெண்ணத்தினால் அல்லவே அல்ல என்றே யூகித்துக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அத்தகு நல்லெண்ணம் அவர்களுக்கு இருந்திருக்குமானால், அதைப் பின்பு கட்டுப்படுத்தவேண்டிய விருப்பமும் அவர்களுக்கு ஏற்படாமல் அல்லவா இருந்திருக்க வேண்டும்? ஆனால், முன்னர் வழங்கிய உரிமைக்குப் பின்னர் கடிவாளமிட்டிருக்கிறார்கள். இதனால், குடிமக்கள் உரிமைகள் அனைத்தும் பெற்று வாழ வேண்டும் என்பதல்ல அவர்கள் விருப்பம் என்பது விளக்கமாகிறது. ஆனால், குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளனைத்தும் வழங்கி இருப்பதாக விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் அவர்கள் நாட்டமுடையவர்களாக உள்ளனர் என்பது, அடிப்படை உரிமைப் பட்டியலை அரசியல் சட்டத்தில் புகுத்தி இருப்பதின் மூலம் அம்பலமாகிறது. இதற்கு என்ன பொருள்?

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள குடிமக்கள் அடிப்படை உரிமைகளை அனுபவித்தாலும் அனுபவிக்காமற்போனாலும், அதுபற்றி, காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு இருக்கும் கவலையைக் காட்டிலும், அரசியல் சட்டத்தைப் படிக்கும் பிற நாட்டு மக்கள், இங்குள்ள மக்கள் எல்லா அடிப்படை உரிமைகளையும் பெற்றுத்தான் வாழ்ந்து வருகிறார்கள் என முடிவுகட்டிக்கொள்ள வேண்டுமென்பதில்தான், அவர்களுக்கு அதிகக் கவலை இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டியதாகிறது. இத்துறையில் உலகத்தவர் புகழைத்தான், அவர்கள் பெரிதாக மதித்திருக்கிறார்கள். அதைப் பெறத்தான் அவர்கள் அடிப்படை உரிமைப் பட்டியலை அரசியல் சட்டத்தில் வேண்டாவெறுப்பாகத் திணித்திருக்கிறார்கள். இந்த நோக்கம் அவர்களுக்கு இல்லாமல் இருந்திருக்குமானால், ஆரம்பத்தில் வழங்கிய அடிப்படை உரிமையை, பிறகு ஒரு நாள் மாற்றவே நினைத்திருக்கமாட்டார்கள். நினைப்பதோடு மட்டுமல்லாமல், மாற்றியுமிருக்கிறார்கள். எனவே, அடிப்படை உரிமை ஏற்பாட்டை அரசியல் சட்டத்தில் காங்கிரஸ் மேலிடத்தார் புகுத்தியதே, உலகப் புகழைக் குறியாகக் கொண்டேயல்லாது, உள்நாட்டு மக்கள் உரிமை பெற்று வாழ வேண்டும் என்ற உயர் நினைப்பால் அல்ல என்பதை, அவர்கள் செயல் உறுதிப்படுத்துகிறது. நிற்க,

அரசியல் சட்டத்தின் துவக்கத்திலேயே இந்திய அரசு கடைப்பிடித்து ஒழுக வேண்டிய குறிக்கோள் சில குறிக்கப்பட்டுள்ளன. அந்தக் குறிக்கோள் படலத்தில் உள்ள எந்த ஒன்றையும், இதுவரை ஏன் செயலாற்ற ஆளவந்தார்கள் முன்வரவில்லை என்று, அப்பிரச்சினையை முன்வைத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. அக்குறிக்கோள் தொகுப்பை சொல்லுக்குச் சொல் நிறைவேற்றச் சட்டமியற்ற வேண்டும் என்ற கடமையோ, கட்டாயமோ ஆளவந்தார்களுக்கும் கிடையாது. அதுவெறும் ஏட்டுச் சுரை! இதோபதேசம்! காங்கிரஸ் மேலிடத்துக் கண்ணன் காட்டிய வழி!

அரசியல் சட்டத்தில் உள்ள குடிமக்கள் அடிப்படை உரிமை அதிகாரம் சக்கரைப் பந்தல் என்றால், அதே சட்டத்தில் இடம் பெற்றுள்ள குறிக்கோள் ஏற்பாடு தேன்மாரி! இரண்டும் இனிப்புப் பொருட்கள்—ஆனால் சாதாரண குடிமக்களுக்குக் கிட்டாத எட்டாப் பொருள்!

அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுகளுக்குள்ளாக, பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அனைவருக்கும், கட்டாய இலவசக் கல்வி வழங்கவேண்டுமென்பது அக்குறிக்கோள் ஏற்பாட்டில் ஒன்று. இதை ஒரு புகலாகக் கூறிக்கொண்டுதான், அன்பர் ஆச்சாரியாரும் தனது குட்டிச் சுவர் திட்டத்தைக் கல்வித் துறையில் உலாவவிட்டார். அவரால் நியமிக்கப்பட்ட பாருலேகர் குழுவும், இதே குறிக்கோள் ஏற்பாட்டைப் புகலாகக்கொண்டுதான், அவர் கோணல் திட்டத்திற்கு 'ஆமாம்' கூறியது!

அதை, சட்டமியற்றி ஐந்து ஆண்டுகளுக்குள் செயலாற்றப்படி ஆட்சியாளர்களைக் கட்டாயப்படுத்தும் ஒரு ஏற்பாடாக மாற்றி அமைக்க வேண்டும் என, காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் அக்குறிக்கோள் விதிக்குத் திருத்தம் ஒன்றை, மக்கள் சபையில் கொண்டுவந்தார்; அது தோற்கடிக்கப்பட்டது.

திருத்தம் கொண்டுவந்ததும் காங்கிரஸ் உறுப்பினர்தான்—அதைத் தோற்கடித்ததும் காங்கிரஸ் உறுப்பினர்கள்தான். இரு சாராரும் காங்கிரஸ் ஆளவந்தார்களின் கூடாரத்தில் இருப்பவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பதினான்கு வயதுக்குட்பட்டவர்களனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிப்பதற்குப் பதினாறு ஆண்டுகள் தேவைப்படுகிறது என்றும், ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபாய் நானூறு கோடி செலவாகும் என்றும், அதற்கான பணம் அரசாங்கத்திடம் கிடையாது என்றும், அதுவுமல்லாமல் கல்வி மாநில அரசாங்கங்களைப் பொறுத்த விஷயம் என்றும் காங்கிரஸ் ஆளவந்தார்கள் சார்பில் கூறப்பட்டது.

'கல்வி' மாநில அரசாங்கங்களைப் பொறுத்த விஷயம் எனும் கூற்று, சட்டப்படி நியாயமானதாக இருக்கலாமேயல்லாது, மாநிலங்களுக்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள மற்ற விவகாரங்களில் மத்திய அரசாங்கம் அளவு மீறி குறுக்கிட்டுவரும்பொழுது, இக்கல்விக்கு மட்டும் சட்டத்தின்மீது பழிபோட்டுப் பேசுவது, வெறும் பொருந்தாக் கூற்றேயாகும். படித்தவர்களிடை உள்ள வேலையின்மையைப் போக்குவதையே குறியாகக் கொண்டு, ஓராசிரியரைக் கொண்ட பள்ளிகளைத் திறக்க, மாநிலங்களைக் கட்டாயப்படுத்தத்தானே செய்தது இந்தியப் பேரரசு? 'கல்வி' மாநிலங்களைச் சேர்ந்த விஷயமாயிற்றே என்ற பெரும் புத்தி, அப்பொழுது இந்தியப் பேரரசுக்கு இல்லாதுபோனது ஏன்?

பத்து ஆண்டுகளுக்குள் பதினான்கு வயதுக்குட்பட்டுள்ளவர்களுக்கெல்லாம் கட்டாய இலவசக் கல்வி அளிக்கவேண்டும்!

அருமையான குறிக்கோள்! அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது!

படிப்பதற்கு இன்பமளிக்கிறது! ஆனால் செயலில் நிறைவேற்றக் கூடாதது—நிறைவேற்ற வேண்டுமே என ஆளவந்தார்கள் விருப்பம் கொள்ளாதது! ஆனாலும், சட்டப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

16 ஆண்டுகள் பிடிக்கும்!

ஒவ்வொரு ஆண்டிற்கும் 400 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும்!

6400 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டால், 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 14 வயதுக்குட்பட்ட படிக்காத சிறுவர்களே இத்துணைக் கண்டத்தில் இருக்கவேமாட்டார்கள்!

ஆனால், இவ்வளவு பெருந்தொகை, இந்தியப் பேரரசிடமும் கிடையாதாம்; மாநில அரசாங்கங்களிடமும் கிடையாதாம்!

இதுவும் வெறும் இதோபதேசம்! காங்கிரஸ் கண்ணன் காட்டிய வழி!

அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள அடிப்படை உரிமை ஏற்பாடும், குறிக்கோள் தொகுப்பும், உள்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தருவதற்காக அல்ல; உலக மக்களை மயக்கவே என்பது உறுதியாகிறது.

அந்தத் திருத்தம் தோற்றது கண்டு மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் மனம் உடைந்து கூறுகிறார், 'என் போன்றுள்ள சாதாரண உறுப்பினர்கள் தனி மசோதாக்கள் மூலம் எவ்விதத் திருத்தத்தையும் செய்ய அனுமதிப்பது கிடையாது; எப்பொழுதும், எல்லா காலங்களிலும் அரசாங்கத்தை ஆதரிக்க வைப்பதின் மூலம் எங்கள் முதுகெலும்புகள் முழுதும் முறிந்தே விட்டன' என்று! ஆம்! அதே நிலையில்தான் நாட்டு மக்களும் உள்ளனர்!

தூத்துக்குடியில் சோடா உப்புத் தொழிற்சாலை

தூத்துக்குடியில் ஒரு சோடா உப்புத் தொழிற்சாலை நிறுவப்படுமென்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணைத் தொழிலமைச்சர் கனுங்கோ தெரிவித்திருக்கிறார்.

வைகை நீர்த் தேக்கத் திட்டம்

2 கோடி 80 லட்சம் ரூபாய் செலவிடப்படும்

வைகை நீர்த்தேக்கத் திட்டம் முழுவதற்கும் சென்னை சர்க்கார் அனுமதி தந்துள்ளதாக சர்க்கார் அறிவிப்பொன்று கூறுகிறது.

இத்திட்டம் முழுமைக்கும் ரூ. 2 கோடி 80 இலட்சம் செலவாகுமென்றும், அணைக்கட்டின் முகப்புக்கு மட்டும் ரூ. 2 கோடி 43 இலட்சம் செலவாகுமெனவும், அணைக்கட்டு முகப்புக்காகும் செலவில் பாதியை மின்சார இலாகா ஏற்றுக்கொள்ளுமென்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

இவ்வணைக்கட்டின் நீளம் 11,600 அடியாகவும், உயரம் 116 அடியாகவும் இருக்குமென சொல்லப்படுகிறது.

மாற்றியமைக்கப்பட்டிருக்கின்ற இத்திட்டத்தின்படி பெரியாறு தண்ணீரை மட்டுமல்லாமல், வைகை ஆற்றுத் தண்ணீரையும் தேக்கி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தில் தேக்கப்படும் பெரியாற்றின் தண்ணீர் 3,000 ஏகர் புஞ்செய் நிலம் உட்பட 20,000 ஏகர் உபரி நிலங்களுக்குப் பயன்படும். இவற்றுள் 7,000 ஏகர் நிலங்கள் சிவகெங்கை தாலுகாவிலும், 10,000 ஏகர் நிலங்கள் திருமங்கலம் தாலுகாவிலும் உள்ளனவென்றும் கூறப்படுகிறது.

அணு ஆயுதப் பரீட்சைகள்

ஆஸ்திரேலியாவில் நடைபெறாது!

"ஆஸ்திரேலிய மண்ணில் நீர் வாயுக்குண்டுகளைப் பரிசோதனை செய்வது என்ற பிரச்சினையே கிடையாது," என ஆஸ்திரேலிய அமைச்சர் ஹாவர்டு பீலி கூறியுள்ளார்.

லண்டனிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று, எதிர்காலத்தில், அணு ஆயுதங்களை ஆஸ்திரேலியாவில் பரீசித்துப் பார்ப்பதற்காக பேச்சு வார்த்தைகள் நடத்த பிரிட்டிஷ் குழு ஒன்று ஆஸ்திரேலியா சென்றிருப்பதாகக் கூறியது.

பட்டு நூல் உற்பத்தி

ரூ. 10 கோடி செலவில் பம்பாயில் ஆலை அமைகிறது

பம்பாயிலுள்ள பட்டு, செயற்கைப் பட்டு மில் சங்கமும், இத்தாலிய ரயான் நூல் உற்பத்தியாளர்களும் சேர்ந்து, பம்பாய் மாநிலத்தில் ரூ. 10 கோடி செலவில் ஒரு ரயான் நூல் உற்பத்திச் சாலை நிறுவத் திட்டமிட்டுள்ளனர்.

இத்தொழிற்சாலை, இந்தியாவிலேயே மூன்றாவது மிகப் பெரிய தொழிற்சாலையாகும்.

இத்தொழிற்சாலை இன்னும் இரண்டே ஆண்டுகளில் வேலை செய்யத் தொடங்குமெனவும், அதை நிறுவுவதற்கான இடமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்காக இத்தாலிய நிபுணர்களின் ஆதுக் குழு ஒன்று, சூரத் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து வருவதாகவும் தெரிகிறது.

இத்தொழிற்சாலையில், ஆரம்பத்தில், தினசரி 10 டன் ரயான் நூல் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இப்போது இந்தியாவின் பட்டு நூல் தேவையில் 5-ல் 1 பாகத்தை அது பூர்த்தி செய்யுமெனவும் கூறப்படுகிறது.

இந்தியாவில் தினமொன்றுக்கு 12½ டன் நூல்தான் உற்பத்தியாகிறதென்றும், ஆனால், தேவைப்படுவதோ 50 டன் என்றும், 1955—56-ல், இது, 70 டன்னாக அதிகரிக்குமென்று திட்டக்குழு எதிர்பார்ப்பதாகவும், இத்தாலிய நிபுணர் குழு கூறியிருக்கிறதாம்.

இத்தொழிற்சாலை நிறுவுவதில் இந்திய சர்க்காரும் பங்கு பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கையின் உள்நாட்டு பகுதிகளில் நெடுஞ்செழியன் சுற்றுப் பயணம்

அனைத்திடங்களிலும் ஆரவாரவரவேற்பு

கழக வளர்ச்சிக்கான கருத்துமிக்க சொற்பொழிவுகள்

திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இலங்கைச் சுற்றுப் பயணத்தின்போது, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு விழாவை ஒட்டி அக்டோபர் திங்கள் 15, 16, 17 ஆகிய நாட்களில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் மூன்று நாட்களிலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய நிகழ்ச்சிகளின் விவரம் முன்னரே 'நம் நாடு' இதழில் வெளியிடப் பெற்றிருக்கிறது.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 19—10—54-ம் நாள் முதல் 23—10—54-ம் நாள் வரையில் சுமார் 1,300 மைல்களுக்கு மேல் சுற்றுப் பயணம் செய்து ஆங்காங்கு நடைபெற்ற தமிழ்ச் சங்கக் கூட்டங்களிலும், தி. மு. கழகப் பொதுக் கூட்டங்களிலும், வரவேற்புகளிலும், விருந்துகளிலும் கலந்து கொண்டார்கள். அந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளின் சுருக்கமான விவரம் கீழே தரப்படுகின்றது :—

கொழும்பு :

ஸாஹிராக் கல்லூரித் தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம்

18—10—54-ல் தோழர் இரா. நெடுஞ்செழியன் வெளியூர்ச் சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்புவதற்குமுன், கொழும்பு நகரிலுள்ள ஸாஹிராக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டம் பகல் 12 மணிக்குத் துவக்கமாயிற்று. கூட்டத்திற்குக் கல்லூரித் தலைவர் தோழர் அஜீஸ் தலைமை தாங்கினார்கள். தலைவர் தம் முன்னுரையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்கும் வாய்ப்பும், அவர் சொற்பொழிவினைக் கேட்கும் வாய்ப்பும் ஸாஹிராக் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்பாராத நிலைமையில் ஏற்பட்டதற்காக மிக்க மகிழ்ச்சியுறுவதாகத் தெரிவித்தார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் "இளமை உள்ளம்" என்னும் பொருள் பற்றிச் சுமார் ஒரு மணி நேரம் ஆராய்ச்சிமிகுந்த உணர்ச்சிகரமான சொற்பொழிவு ஆற்றினார். தமிழ் மன்றத்தின் மாணவர் செயலாளர் நன்றி கூறினார்.

மண்டபம் முழுவதும் மாணவர்கள் நிரம்பியிருந்து, சொற்பொழிவின் போது இடையிடையே சிரிப்பொலி செய்தும், கையொலி செய்தும் தம் மகிழ்ச்சியையும், உணர்ச்சியையும் காட்டிக் கொண்டனர். இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு தலைமைத் தமிழாசிரியர் தோழர் புலவர் கந்தையா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் பாராட்டுவதற்குரியதாகும்.

கல்லூரிக் கூட்டம் முடிந்தவுடன், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தோழர்கள் எஸ். சேதுராமன், மாணிக்கம் ஆகிய இரு நண்பர்களையும் உடன் அழைத்துக்கொண்டு தனிக் காரில் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம்

18—10—54-ல் கொழும்பை விட்டுப் புறப்பட்ட தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றைய நண்பர்களும் அன்று இரவு 7-30 மணிக்குப் புத்தளம் என்ற ஊரைச் சேர்ந்து, அங்குள்ள அரசியலார் இளைப்பாற்று விடுதியில் இரவுப் பொழுதைக் கழித்தனர்.

19—10—54-ம் நாள் காலை புறப்பட்டு வழியில் அனுராதபுரத்திலுள்ள பழைய புத்தமதச் சின்னங்களையும், பாழடைந்து இடிந்து தரைமட்டமாகிவிட்ட அரச மாளிகை இடங்களையும், சிறிது நேரம் சுற்றிப் பார்த்துவிட்டுப் பகல் 12-30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும், பிறரையும், குமார பாளையம் தோழர்கள் சிலர் வரவேற்றுத் தம் இருக்கையில் பகல் விருந்து அளித்தனர். நண்பகலுக்குப் பிறகு நண்பர்களோடு புகைப் படம் எடுக்கப்பட்டது.

பரமேசுவரக் கல்லூரித் தமிழ் மன்றச் சிறப்புக் கூட்டம்

காலஞ்சென்ற சர். பொன்னம்பலம் ராமனுதன் அவர்களால் நிறுவப்பட்ட பரமேசுவரக் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பாகச் சிறப்புக் கூட்டம் ஒன்று, கல்லூரி மண்டபத்தில், மாணவத் தலைவரின் தலைமையின் கீழ் மாலை 4-மணிக்கு நடைபெற்றது. மாணவர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் மண்டபம் நிறையக் குழுமியிருந்தனர்.

இன்னிசைப் பாடலுக்குப் பிறகு தலைவர் முன்னுரை நிகழ்த்தினார்.

பின்னர் தோழர் இரா. நெடுஞ்செழியன் "வருங் காலத் தமிழர்கள்" என்னும் பொருள் பற்றிச் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாகச் சொற்பொழிவாற்றினார். மாணவர்கள் ஊக்கத்தோடு கேட்டு மகிழ்ந்தனர்.

மாணவர் செயலாளர் நன்றி கூறலுக்குப் பிறகு கூட்டம் மாலை 5–15 மணிக்கு முடிவுற்றது.

சைவாசிரியக் கலாசாலைக் கூட்டம்

யாழ்ப்பாணத்தில் தமிழாசிரியர் பயிற்சிக்காக என்று நிறுவப்பட்டிருக்கும் சைவாசிரியக் கலாசாலையின் சிறப்புக் கூட்டம் மாலை 5–30 மணிக்கு நடைபெற்றது. பயிற்சி பெறும் மாணவர்களும், மகளிரும் மிக்க ஆவலோடு சொற்பொழிவு மண்டபத்தில் கூடியிருந்தனர். கொட்டும் மழை பெய்தும் கூட்டம் சிறப்பாகக் கூடியிருந்தது பாராட்டத் தக்கதாகும்.

கல்லூரி விரிவுரையாளர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் "தமிழாசிரியர் கடமை" என்னும் பொருள் பற்றி அரிய விரிவுரையாற்றினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

பிரம்மாண்ட அளவில் நேதாஜி சுபாஷ் சிலை

கல்கத்தாவில் அமைக்க முடிவு

கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் நேதாஜி சுபாஷ் சந்திர போசின் சிலை ஒன்றை மிகப் பிரம்மாண்டமான அளவில் நிறுவ வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இதற்காக ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாம்.

இது பற்றி அந்தக் குழு, மேற்கு வங்க முதல்வர் டாக்டர் பி. வி. ராய் இன்னும் மேயர் எச். கே. மகதாப் ஆகியோரையும் சந்திப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சிலை அமைப்பதுடன் நின்றுவிடக் கூடாதெனவும், தலைவரான நேதாஜியின் வாழ்க்கை அம்சங்களைச் சித்தரிக்கிற சீரிய சித்திரக் கூடம் ஒன்றும் கண்காட்சி சாலையாக அமைக்கப்படவேண்டுமென்றும் எளிதில் மக்களின் கவனத்தைக் கவரும் வகையில் நேதாஜியின் சிலை பிரம்மாண்டமானதாக அமையவேண்டுமெனவும் கூட்டத்தவர் கருதுகின்றனராம்.

மூன்று புதிய பஞ்சாலைகள்

ரூ. 60 லட்சம் மூலதனத்துடன் மதுரையில் அமைகின்றன

தொழிலாளர் காலனியும் கட்டப்படுகிறது

மதுரை நகரில் புதியதாக மூன்று பஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சீக்கிரமே அவற்றில் வேலை துவங்கும்.

இந்த 3 ஆலைகளும், ஒவ்வொன்றும் 10,000 கதிர்கள் கொண்டு மொத்தம் 30 ஆயிரம் கதிர்கள் கொண்டவையாயிருக்கும்.

இந்த ஆலைகள் அமைப்பதற்காக ரூ. 60 லட்சம் மூலதனம் போடப்பட்டுள்ளதாம். இவற்றில் மொத்தம் 3,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் எனத் தெரிகிறது.

மதுரை நகரம், இப்புதிய ஆலைகள் நிறுவப்படுவதின் மூலம் பெரியதொரு பஞ்சாலை நகரமாக வளர்ந்து வருகிறது.

தொழிலாளர் காலனி ஒன்றும் மத்திய அரசாங்க மானிய உதவித் திட்டத்தின்படி கிடைக்கும் தொகை கொண்டு அமைக்கப்பட்டு வருகிறது.

மீனாட்சி மில் நிர்வாகிகள் அமைத்துவரும் இந்தக் காலனியில் மொத்தம் 160 வீடுகள் அமைப்பதென்றும், இவற்றிற்கு ரூ. 10 லட்சம் செலவாகுமெனவும் மதிப்பிடப்பட்டிருப்பதாகத் தகவல் வெளிவந்துள்ளது.

காலனியில் தொழிலாளர்கள் குடியேறியதும், வீடு ஒன்றுக்கு வாடகை ரூ. 10 வீதம் மாதந்தோறும் வசூலிக்கப்படுமாம்.

வருமான வரி விதிப்பு

விலக்கு வரம்பு — ரூ. 6,000-ஆக மாறும்?

ஆமதாபாத், நவ. 26—

இப்போது வருமான வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பதற்குள்ள வரம்பை 4,200 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக மாற்றி மத்திய தர வர்க்கத்தினருக்கு நிவாரணமளிக்குமாறும், 'சூபர் வரி' விலக்கு வரம்பையும் 15,000 ரூபாயாக மாற்றுமாறும் இந்திய சர்க்கார் நியமித்துள்ள வரிவிசாரணைக் குழு சிபாரிசு செய்துள்ளதாக நம்பகமாகத் தெரிகிறதாம்.

விசாரணைக் குழு, தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்து விட்டதாகவும், குழு அங்கத்தினர்களின் முடிவு ஏகமனதாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

அறிவிப்பு

"நெல்லிக்குப்பம் மஜீத் மன்றத்தாராகிய எங்களுக்கு, நாடகம் நடத்தி நிதி வசூலிக்கவேண்டிய அவசியம் இல்லை; அப்படி யாராவது நிதி வசூலிக்கிறார்கள் என்றால், அதற்கும் எங்களுக்கும் ஒருவித தொடர்பும் கிடையாது," என்று, சென்னை 12-வது வட்டத்திலுள்ள மேற்படி மன்றச் செயலாளர் தோழர் தமிழழகன் அறிவிக்கிறார்.

பெயர் சூட்டல்

6—11—54-ல், பெத்தநாய்க்கன் பாளையத்தைச் சேர்ந்த (சேலம் மாவட்டம்) தோழர் பி. மாணிக்கம் அவர்களது மூன்றாவது மகளுக்கு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'மல்லிகா' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 4 அன்பளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—மிக்க நன்றி—பொறுப்பாளர்.

* * *

16—10—54ல், தோழர் எம். கணபதி அவர்களின் பாராட்டுக் கூட்டத்தின்போது, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் திருவொற்றியூர் தி. மு. க. துணைச் செயலாளர் டி. கே. பழனிச்சாமி, அவர்களின் அண்ணாவின் குழந்தைக்கு "பூங்கோதை" என்று பெயர் சூட்டுதல் நடைபெற்றது. அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—மிக்க நன்றி—பொறுப்பாளர்.

சுக வாழ்வும்—சுதந்திர வாழ்வும் எவ்வாறு பெற முடியும்?

வறுமையிலிருந்து விடுதலை என்ற லட்சியத்தில் உணவுப் பிரச்சினை ஆரம்ப வேலைதான்!

பொருளாதாரத் துறையில் அபிவிருத்தியடையாத நாட்டினர் ஒவ்வொருவரும், "வறுமை" என்று கூறும்போது, உணவுப் பிரச்சினையைத்தான் முதலில் நினைத்துக்கொள்கிறார்கள். வறுமையொழிய, உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பது ஆரம்ப வேலைதான். தங்களுடைய விவகாரங்களைக் கவனித்துக்கொண்டு பசியாற, மகிழ்ச்சிகரமாக வாழ்வதே சுக வாழ்வு—சுதந்திர வாழ்வு.

"மக்கள் சுதந்திரமாக வாழ அறிவு மலர வேண்டும்; கல்வியும் பயிற்சியும் வேண்டும்; அதற்குச் சாதன வசதிகளும், அறிஞர்களின் உதவியும் தேவை; பண வசதியில்லாவிட்டால் இது சாத்தியமில்லை; பொருளாதார அபிவிருத்தியில்லாத நாட்டில் பண வசதி எப்படிப் பெருகும்? இதற்குத்தான் தொழில் வளம் பெற முயற்சி தேவை."

ஃ ஃ ஃ

விவசாயத்தை நம்பியே மக்கள் வாழ முடியாது; தொழில் வளம் பெருகவேண்டும். சமூக அபிவிருத்தியும், கல்விப் பெருக்கமும் ஏற்பட்டால்தான் தொழிற் துறைப் பயிற்சியளிப்பது சாத்தியம்.

—பி. பி. சி. உரைக்கோவை

கரும்பு வெல்லம்

ஏராளமாகத் தேக்கம்

ஏற்றுமதி செய்ய கோரிக்கை

மதுரை, நவ. 26—

தென்னாட்டில், கரும்பு வெல்லத் தொழில் மூடப்படும் நிலைக்கு வந்துவிட்டதாம்.

ஏராளமான சரக்குகள் தேங்கிக் கிடப்பதால் கெட்டுப்போகும் நிலையில் உள்ளன என்று வர்த்தக வட்டாரங்கள் கூறுகின்றனவாம்.

தமிழ் நாடு உணவுதானிய வியாபாரிகள் சங்கத்தின் உப கமிட்டி கரும்பு வெல்லம் நிலை குறித்து ஆலோசனை நடத்தியிருக்கிறதாம்.

சென்னை மாநிலத்திலிருந்து குறைந்தது 50,000 டன் கரும்பு வெல்லம், கரும்புச் சர்க்கரை இவற்றை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் தெரியவருகிறது.

---

40 சதவிகித மக்களுக்கு க்ஷயரோக ஆபத்து!

கோவை நகரில் வாழும் மக்களில் 40 சதவிகிதத்தினருக்கு க்ஷயரோக ஆபத்து ஏற்படக்கூடுமென அண்மையில் நடைபெற்ற 'பி. சி. ஜி.' முகாம் தரும் புள்ளி விவர அறிக்கை கூறுகிறது.

மற்றையோருக்கு, இந்த நோயை இயற்கையாகவே தடுத்துக் கொள்ளும் சக்தி இருக்கிறதென்றும் தெரியவருகிறது.

கோவையில் சுமார் 2,10,000 பேர் வசிக்கின்றனர்.

அவர்களில் 80 சதவிகிதத்தினர் கடந்த நவ. 15, 16, 17 தேதிகளில் பரீட்சிக்கப்பட்டதாகவும், அவர்களில் 73,000 பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி போடப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

மதகுருமார்கள் அரசியலில் தலையிடுகிறார்கள்

பியூனஸ் அயர்சில் கொடும்பாவி ஊர்வலம்

அரசியல் விவகாரங்களில் கத்தோலிக்க மத குருமார்கள் தலையிடுகிறார்கள் என்று ஜனாதிபதி பெரான் குற்றம் சாட்டியிருக்கிறார். இதையொட்டி, சர்க்காரின் நிலைமையை விளக்கி, ஒரு பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி பெரான் பேசினார்.

பியூனஸ் அயர்சில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வந்திருந்த மக்களில் பலர், மத குருமார்கள் தூக்கில் தொங்குவதைப் போல் பொம்மைகள் செய்துகொண்டு அவற்றை கோஷங்களுடன் எடுத்து வந்தார்களாம்.

ஹூரு பார்க்கில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வந்த மக்களிடம் பஸ்களில் கட்டணம் வாங்கவில்லை என்று தெரிகிறது.

பெரான் இளைஞர் கழகத்தைச் சேர்ந்தவர்கள், குருமார்கள் மீது குற்றஞ்சாட்டி, துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்தார்களாம்.

கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு முன்னிலையில், சுமார் 20 அடி நீளமுள்ள தட்டி ஒன்றில், 'எங்களுக்கு விவாக ரத்து சட்டங்கள் வேண்டும்,' என்று எழுதப்பட்டிருந்ததாம்.

சர்க்காரின் போக்கை ஆதரிக்கும் முறையில், நாடெங்கிலும் உள்ள அவசியமான தொழில்கள் அனைத்திலும் ஐந்து நிமிடநேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரிகிறது. கடைகள், இதர தொழிற்சாலைகள் அனைத்தும் 6 மணிக்கே மூடப்பட்டுவிட்டனவாம்.

ஏராளமான மக்கள் அடங்கிய கூட்டத்தில் பேசிய பெரான், கத்தோலிக்க மத குருமார்கள் மீது தனது குற்றச்சாட்டை விளக்கிப் பேசுகையில், "இது குருமார்களுக்கும்—சர்க்காருக்கும் இடையேயுள்ள பிரச்சினை அல்ல" என்றும், "மக்களுக்கும், சில குருமார்களுக்கும் இடையேயுள்ள பிரச்சினை" என்றும் குறிப்பிட்டார்.

"இன்றிலிருந்து ஒரு சிலருக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ரத்து செய்யப்படுகின்றன; சட்டத்தின் முன்பு எல்லா மக்களும் சமமானவர்களே," என்று அவர் மேலும் கூறி, மக்களை அமைதியாகக் கலைந்து போகுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியினால், போலீசார், கிறித்தவ ஆலயங்களைக் காவல்புரிந்தனரென்று தெரிகிறது.

‘அங்கிருந்த சூழ்நிலை இந்தியாவில் இல்லை’

‘இங்கும் உள்நாட்டுப் போர் வேண்டும் என்பது மடமை!’

இந்தியப் பொதுவுடைமைக் கட்சிக்கு பண்டிதரின் பல்லாண்டு!

“மார்க்சிய கோட்பாடுகள் 90 ஆண்டுகளுக்குமுன், வேறுபட்ட சூழ்நிலைகளில் வரையப்பட்டவை; 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ரஷ்யப் புரட்சி, அந்தக் கோட்பாடுகளுக்கு அனுபந்தமாயிற்று; ஆனால், அவற்றிற்குப் பிறகு நிலைகள் எத்துணையோ மாறிவிட்டன; அதனால், அந்தக் கோட்பாடுகள், இன்றுள்ள நிலைகளுக்குப் பொருத்தமானவையாக இருக்க முடியாது;

“இந்தியாவில் உள்ள நமது கம்யூனிஸ்டு நண்பர்கள், ஐரோப்பாவில் 90 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட புத்தகங்களை—மிகப் பெரிய புத்தகங்களைப் படித்துவிட்டு, அதில் உள்ள கொள்கைகளைப் பின்பற்றுகிறார்கள்;

“இந்தப் புத்தகங்களில் இந்தியாவைப் பற்றியவை எதுவுமே இல்லை; அந்தப் புத்தகங்களையும், ரஷ்யப் புரட்சி பற்றிய ஏடுகளையும் கம்யூனிஸ்டு நண்பர்கள் புரட்டுகிறார்கள்; அந்த ஏடுகளிலே அவர்களின் அறிவு படிந்து விடுகிறது;

“ஐரோப்பாவில் கடந்த 90 ஆண்டுகளுக்குமுன் நடைபெற்றவைகட்கும், இன்று இந்தியாவில் நிகழுபவைகட்கும், அல்லது பல்லாண்டுகட்குமுன் ரஷ்யாவில் நிகழ்ந்தவைகட்கும், இன்று இந்தியாவில் நிகழ்பவைகளுக்கும், கம்யூனிஸ்டுகள் எப்படி முடிச்சு போடுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.”

—இவ்வாறு, பண்டித நேரு, டெல்லியில் கடந்த 28-ந் தேதியன்று பேசிய பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் இந்திய கம்யூனிஸ்டுகளைப் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இந்தியக் கம்யூனிஸ்டுகள் ஒரு பெருங் குழப்பத்திலிருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்ய முடியும்?

கொள்கை முரண்பாடு, நேரடிக் குழப்பம் இவற்றை வளர்க்கிற ‘பூஜை முறையான’ கொள்கைக்கு, கம்யூனிஸ்டுகள் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள்; நாடு முன்னேறினால், அவர்கள் பலவீனமடைவர்; எனவே, அவர்கள், முன்னேற்றத்திற்கு எதிரிகளாயுள்ளனர்; எனவே, அவர்கள் ஏதேனும் ஒரு குற்றச்சாட்டைக் கண்டுபிடித்து அதற்காக ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியவர்களாயுள்ளனர்.”

மேலும் பண்டித நேரு கூறுகிறார் :—

“நான், கம்யூனிஸ்டுகள் மீது புகார் செய்கிறேன்—அவர்கள், நாட்டின் நலனை அல்ல, தங்கள் கட்சியின் நலனையே அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகளை அணுகுகிறார்கள்—என்று!

“நமது நாடு, வெளிநாட்டாரால் இகழப்பட வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்; அத்தகு காரியங்களையே அவர்கள் கடந்த காலத்தில் செய்து வந்திருக்கின்றனர்.

“சீன கம்யூனிஸ்டுகள், ஆக்க வேலைகளில் ஈடுபடுகிறார்கள்; ஆனால், இந்திய கம்யூனிஸ்டுகள் தேசத்தின் ஒவ்வொரு பிரச்சினையையும், இந்தியாவிற்கு எதிரான, மக்களுக்கு எதிரான, நாட்டிற்கு விரோதமான கண்ணோட்டத்துடனேயே அணுகுகிறார்கள்.

“கம்யூனிஸ்டுகளுக்கு, தாங்கள் பிறந்த நாட்டில் பிடிப்பில்லை; ஆனால், எப்போதும் வழிகாட்டவும், ஆர்வமூட்டவும் வெளிநாடுகளையே நோக்குகிறார்கள்.

“நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்க, இரத்த வெள்ளம், பலாத்காரம், குழப்பம் இவைகளே சாதனமெனக் கருதுகிறார்கள் போலும்! அவர்கள் தெலிங்கானாவில் பலாத்காரமான குழப்பத்தை மூட்டினார்கள்; ஆனால் இப்போது நிறுத்தியுள்ளனர்.

“அதேபோல இப்போது, மக்களை சர்க்காருக்கு எதிராகத் தூண்டிவிட வேலை நிறுத்தங்களை உண்டுபண்ணுகின்றனர்.”

பண்டித நேரு, பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம் கம்யூனிஸ்டுகளாலேயே தூண்டப்பட்டுள்ளது என்றும், அந்த வேலை நிறுத்தம் கூடாதென எச்சரித்தும், வேலை நிறுத்தம் செய்வதாலேயே சர்க்கார் கவிழ்ந்துவிடாதெனவும் கூறிவிட்டு, பின்னர், தொடர்ந்து பேசியதாவது :—

“ரஷ்யாவிலும் சீனாவிலும் புரட்சிகள் நடைபெற்றன; இந்தப் புரட்சிகள் எல்லாம், ஆங்கு நிலவிய குறிப்பிட்ட சூழ்நிலைகளின் விளைவுகளாகும்.

சீனாவில் 43 ஆண்டுக்காலமாக உள்நாட்டுப் போர் நடைபெற்றது. அங்கு குழப்பமும், சண்டையும், யுத்தமும் நடைபெற்றன; இந்த நீண்ட போராட்டத்தின்போது சீன கம்யூனிஸ்டுகள் பெருந்தொல்லைகளையும், கஷ்டங்களையும் சமாளித்திருக்கிறார்கள். பின்பு தங்கள் புரட்சியில் வெற்றி கண்டார்கள்; ஆனால் அதே போன்ற ஒரு காரியம் இந்தியாவிலும் நடைபெற வேண்டுமெனக் கூறுவது முட்டாள்தனமானதாகும். இந்தியாவில் ஒரு புரட்சி நடைபெற 40 ஆண்டுகள் உள்நாட்டுப் போர் நடக்க வேண்டுமா? இப்படிச் சொல்வது முழு முட்டாள்தனமானதாகும். சீனா சாதித்துள்ளவற்றை இந்தியாவும் சாதிக்க முடியும் என்று கூறுபவர்களை இப்படிச் சொல்லி வருகிறார்கள்.

இந்தியா, அதன் பாரம்பரியத்திற்கும், நெறிமுறைக்கும் ஒப்ப முன்னேற்றமடையும்.

சீனக் கம்யூனிஸ்டு தலைவர்கள் சிறந்த அறிவாளிகள்; அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்கள், தங்கள் சிந்தனை முறை வளத்திற்கொப்ப தங்களுக்கெனச் சொந்தமான கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றனர். அவர்கள், தங்கள் தேவைக்கும், சூழ்நிலைக்கும், சுற்று நிலைகளுக்கும் ஒப்ப கம்யூனிசத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கம்யூனிசம் ரஷ்ய முறைக் கம்யூனிசத்தைப் போன்றது அல்ல; சீனக் கம்யூனிஸ்டுகளையும் அவர்கள் சிந்திக்கும் முறையையும் நான் பெரிதும் மதிக்கிறேன்.”

‘ஜன சங்’ புதிய தலைவர்

பிரேம்நாத் டோக்ரா ஏற்றுக்கொள்ள முடிவு

அகில இந்திய ஜனசங் இயக்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள பிரஜா பரிஷத் தலைவரான பிரேம்நாத் டோக்ரா முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது.

அவர் பிரஜா பரிஷத் தலைவராகவும் தொடர்ந்து பணி புரிவாராம்.

இலங்கையின் உள்நாட்டுப்பகுதியில் நெடுஞ்செழியன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் முடிவுரைக்குப் பின் மாணவத் தோழர் ஒருவர் நன்றி கூறக் கூட்டம் 6 மணிக்கு இனிது முடிந்தது.

தி. மு. க. யாழ்ப்பாணக் கிளைப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாபெரும் பொதுக்கூட்டம் நகர மண்டபத்தில் கூட்டப்பெற்றது. கழகச் செயலாளர் தோழர் வி. எஸ். நடராசன் அவர்களும், ஏனைய உறுப்பினர்களும் அரும்பாடுபட்டு, மிக்க உணர்ச்சியோடும், விளக்கத்தோடும், நல்ல முறையில் கூட்டத்திற்கான விளம்பரம் செய்து பொதுக்கூட்டத்தை அழகுறக் கூட்டியிருந்தனர்.

தி. மு. கழகத்தின் சார்பாக இப்பொழுதுதான் முதன் முதல் பொதுக்கூட்டம் நடைபெறுகிற காரணத்தாலும், தி. மு. கழகப் பேச்சாளரின் பேச்சை முதன் முதல் கேட்கிற வாய்ப்பைப் பெறுகிற காரணத்தாலும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் பெரும் ஆவலோடு நகர மண்டபத்தின் உள்ளும், வெளித் தாழ்வாரங்களிலும் மிக்க நெருக்கமாகக் குழுமியிருந்தனர். பெருமழை பெய்துகொண்டிருந்த காரணத்தால் சமாளிக்க முடியாத அளவுக்கு உள்ளும், புறமும் இட நெருக்கடி ஏற்பட்டிருந்தது. கூட்டத்திற்கு உயர்ந்த அரசியல் அலுவலாளர்களும், ஊர்ப்பெரியவர்களும், தமிழறிந்தோரும், மாணவர்களும், கழகத் தோழர்களும், பெண்மணிகளும், பொதுமக்களும் வருகை தந்திருந்தனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புலவர் க வேந்தனார் அவர்களோடு மாலை 6-10 மணிக்கு மண்டபத்தில் நுழைந்தார். கூடியிருந்த மக்கள் பெருத்த ஆரவாரத்தோடு கையொலி எழுப்பி வரவேற்றார்கள்.

பொதுக்கூட்டத்திற்குப் புலவர் க. வேந்தனார் அவர்கள் தலைமை யேற்றார்கள். தலைவர், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றுப் பேசி, தமிழின் பெருமையைப் பற்றியும், சீர்திருத்தக் கருத்துக்களின் அவசியத்தைப் பற்றியும் சிறிது நேரம் பேசினார்கள்.

பின்னர் தி. மு. கழகத்தின் சார்பாகவும், பல்வேறு சங்கங்களின் சார்பாகவும் தோழர் நெடுஞ்செழியனுக்கு மலர் மாலைகள் அணியப்பட்டன.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பெருத்த கை தட்டல்களுக்கிடையே எழுந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, குறிக்கோள், திட்டம் ஆகியவைகள் பற்றியும், இலங்கை தி மு. கழகத்திற்கும் தென்னாட்டுத் தி. மு. கழகத்திற்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமைகளைப் பற்றியும் கூறிவிட்டுத், ‘தமிழர் நாகரிகம்’ என்னும் தலைப்பில் ஆராய்ச்சி மிக்க, இலக்கிய நயம் பொருந்திய, அழகிய, அரிய சொற்பொழிவு ஒன்றாற்றினார். சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக ஆற்றிய உணர்ச்சி மிகுந்த அந்தச் சொற்பொழிவை மக்கள் மிக்கக் களிப்போடும், உன்னிப்போடும் கேட்டார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கழகத் தோழர் கணபதி அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் வாழ்த்தொலிகளோடு முடிவுற்றது.

இந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாண மக்களிடத்தில் தி. மு. கழகத்தைப் பற்றிய நல்ல எண்ணத்தை வளர்த்திருப்பதோடு, ஏற்கனவே கழகத்தைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்களை மாற்றிக் கொள்ளும் படியும் செய்திருக்கிறது என்னலாம். யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பல மைல்களுக்கு அப்பாலுள்ள சிற்றூர், பேரூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்தது குறிப்பிடத் தக்கதாகும்.

அன்று இரவு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அவரோடு வந்த நண்பர்கள் தோழர்கள் சேதுராமன், மாணிக்கம் ஆகியோரும் அரசாங்க இளைப்பாற்று விடுதியில் தங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள பல்வேறு ஊர்களின் கழகத் தோழர்கள், தோழர் நெடுஞ்செழியனைக் கண்டு பேசியிருந்துவிட்டுச் சென்றனர்.

(தொடரும்)

நாடகக் கலைக்குப் புதிய...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆட்சேபகரமான காட்சிகள் என அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு :—

பலாத்காரத்தில் ஈடுபடுமாறு தூண்டுவதோ, சட்டப்படி அமைந்துள்ள சர்க்காரைக் கவிழ்க்கும் நோக்குடன், சர்க்கார் நடவடிக்கைகளை செயலற்றதாகச் செய்ய ஊக்குவதோ, சட்டப்படி தவறுடையதாகும்.

பலாத்காரத்திற்குட்பட்ட கொலைக் குற்றம் புரியத் தூண்டுவது, இராணுவம்—போலீஸ் ஆகிய பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களை சர்க்காருக்கு எதிராகத் தூண்டுவது, குழப்பம் விளைவிக்க போதிப்பது முதலியனவும் புதிய சட்டத்தின்படி ஆட்சேபகரமானதாகக் கொள்ளப்படும்.

பல்வேறு பிரிவைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களிடை ஒருவருக்கெதிராக ஒருவரை தூண்டிவிடுவது, பகைமையை வளர்ப்பது; மதத்தையும், மதக் கருத்துக்களையும் கேலி செய்வதின் மூலம், இந்தியக் குடிமக்களில் குறிப்பிட்ட வகுப்பினரின் மதவுணர்வைப் புண்படுத்துவது; ஆகிய இவ்விரண்டும், புதிய சட்டத்தில் ஆட்சேபகரமானவை எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

மேற்குறித்துள்ள விஷயங்களை உள்ளடக்கிய நாடகங்களை, முன்கூட்டியே தடுத்துவிடும் அதிகாரத்தை, புதிய சட்டத்தின் மூலம் சர்க்கார் பெறுகிறது. ஆனால், அப்படி எடுத்துக்கொள்ளப்படும் தடுப்பு நடவடிக்கைக்கு நடவடிக்கையை எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகவே, தொடர்புடையவர்களை சர்க்கார் விளக்கம் கோருமாம்!

சர்க்கார் போக்கை நியாயமான முறையில் கண்டிக்கவும், செய்துள்ள சட்டங்களைத் திருத்த வேண்டுமென வலியுறுத்தவோ உச்சரிக்கப்படும் சொற்களும், காட்சிகளும், வெளிப்படுத்தும் செயல்களும், ஆட்சேபகரமானதாகக் கொள்ளப்படாது எனவும் புதிய சட்டம் விளக்கம் தந்திருக்கிறது.

சொற்கள், காட்சிகள், வெளிப்படுத்தும் செயல்கள் ஆகியவற்றைக்கொண்டுதான், குறிப்பிட்ட ஒரு கூத்து சட்டப்படி ஆட்சேபகரமானதா, இல்லையா எனத் தீர்மானிக்கப்படுமே அல்லாது அதைச் செய்பவர்களின் உள் நோக்கத்தைக் கொண்டு, அம்முடிவு கொள்ளப்படமாட்டாது எனவும் அச்சட்டம் அறிவிக்கிறது.

நடைபெறும் காட்சியால் அமைதிகெடக்கூடும் என சர்க்கார் கருதினால், தற்காலிகமாக அக்காட்சியை இரண்டு மாதம் வரை தடுக்கவும், அக்காலத்தை மேலும் நீடித்துக்கொண்டே போகவும், இச்சட்டத்தின் மூலம் சர்க்கார் அதிகாரம் கோரி இருக்கிறது.

சர்க்கார் தடையை மீறுகிறவர்களுக்கு, ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட சிறைவாசமும் அபராதமும், அல்லது இரண்டும் தரப்படும் எனப் புதிய சட்டம் அச்சுறுத்துகிறது.

நாடக நகலையும், அதன் தொடர்புடைய மற்ற விளக்கங்களையும் கோர புதிய சட்டம் சர்க்காருக்கு உரிமை தருகிறது.

சர்க்கார் மேற்கொள்ளும் இந்தத் தடுப்பு நடவடிக்கையை எதிர்த்து, தடை உத்திரவு பிறந்த 60 நாட்களுக்குள், பாதகமடைந்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர, இச்சட்டம் உரிமை வழங்குகிறது.

ம. சோ. கட்சி மாநாடு

லோகியாவுக்கு தோல்வி

நரேந்திர தேவ் கட்சியின் புதுத் தலைவர்

நாகபுரி, நவ. 29—

இங்கு கடந்த மூன்று நாட்களாக நடைபெற்று முடிவுற்றுள்ள ம. சோ. கட்சியின் தனி மாநாடு, ஆச்சார்ய நரேந்திர தேவைக் கட்சித் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளதாம்.

திரு-கொச்சியில் பட்டம்தலைமையிலுள்ள ம. சோ. கட்சி சர்க்கார் ராஜினாமா செய்யவேண்டும் என்று டாக்டர் லோகியா கொண்டுவந்த தீர்மானம் மாநாட்டில் தோற்றது.

இப்பிரச்சினை குறித்து டில்லியில் கூடிய நிர்வாகக் குழு மேற்கொண்ட முடிவே மாநாட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

இதன் பின்னர் கட்சித் தலைவரான ஆச்சாரிய கிருபளானி தனது பதவியை ராஜினாமா செய்ததுடன், நிர்வாகக் குழுவினரின் ராஜினாமாவையும் மாநாட்டில் சமர்ப்பித்து ‘விடுதலை’ பெற்றுக் கொண்டாராம்.

புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஆச்சார்ய நரேந்திர தேவ், டெல்லி சென்று இன்னும் இரண்டொரு நாட்களில் தனது புதிய நிர்வாகக் குழுவினரின் பட்டியலை அறிவிப்பார் எனத் தெரிகிறது.

தாய்மார் கழகம்

30-11-54 பிற்பகல் 2-30 மணிக்குமேல், சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். ‘பிறன் இல் விழையாமை’ என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் டபிள்யு. எஸ். ஜெயகுமாரி ஆகியோர் பேசுவர்.

பொதுக் கூட்டம்

1-12-54 மாலை 7 மணிக்கு, கணியூர், புதூர் மடத்தில், அழகிரி மன்ற 2-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் தோழர் உடுமலையான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கே. ஏ. மதியழகன், டி. கே. தாமரைச்செல்வன் ஆகியோர் பேசுவர்.

கலா நிகழ்ச்சி

1-12-54 மாலை 6 மணிக்குமேல், விசமங்கலம் கிராமத்தில் அமைத்திருக்கும் அழகிரி அரங்கில் விசமங்கலம் தி. மு. கழகச் சார்பில் தோழர் சி. எம். பாஞ்சாலன் தலைமையில் தோழர் சிற்றுனி சுப்பிரமணியம் குழுவினரால் ‘அரசியலும் மதமும்’ என்னும் பொருள் பற்றி கலா நிகழ்ச்சி நடைபெறும்.

திருமணங்கள்

1-12-54 காலை 7 மணியளவில், கணியூர் (அரிய நாச்சிபாளையம்) மணமகன் இல்லத்தில்,— தோழர் எம். ராமசாமி-தோழியர் பி. சப்பாத்தாள் திருமணம் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெறும். தோழர் டி. கே. தாமரைச்செல்வன் பேசுவார்.

* * *

1-12-54 காலை 10 மணிக்கு, விளாத்திகுளம், மணமகன் இல்லத்தில், தோழர் நவமணி-தோழியர் பத்திரகாளி என்ற பெரியநாயி திருமணம் தோழர் எஸ். யாக்கோபு தலைமையில் நடைபெறும். தோழர் கே. வி. கே. சாமி பேசுவார்.

* * *

1-12-54 காலை 10 மணியளவில், கல்லூரணியில் தோழர் க. அ. புன்னைமுத்து இல்லத்தில், தோழர் பால்சாமி-தோழியர் இராசாத்தி திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ